www.tamilarangam.net


# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

# Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)


0129

## தமிழீழத்தின் நாளாந்த நிகழ்வுகள்

கிழமை (44)

8/11/86 கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு அருகில் ராணுவத்தினருக்கும் எம்மவர்களுக்கும் இடையே நடந்த மோதலில் போது எம்மவரான யான் என்றும் வீரவேங்கை வீரமரணம் அடைந்துள்ளார் என்பதனை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வீரம் வீரவேங்கைக்கு எமது வீர வணக்கத்தை செலுத்துகின்றோம்.

அண்மைக்காலமாக சென்னையிலும் மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு கிராமங்களிலும் கட்டுப்பாடும், ஒழுக்கமும், விடுதலையுணர்வும் அற்ற சில தமிழீழ விடுதலை அமைப்புக்களால் நடாத்தப்பட்ட சமூக விரோதச் செயல்களால் எமது நடவடிக்கைகட்கு தஞ்சமாக அமைந்த தமிழக மண்ணில் எமது நடவடிக்கைகட்கும் தமிழக பொலிசாரால் இடையூறு ஏற்பட்டுள்ளது. இன்று காலை எமது தலைவர் திரு. வே. பிரபாகரனும் மற்றும் தலைமைக் காரியத்தில் இருந்தவர்களும் மத்திய அரசின் பணிப்பின்பேரில் தமிழகப் பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் மாலை 3மணியளவில் விடுவிக்கப்பட்டனர். போலி இயக்கங்களின் அடாவடித் தனங்களால் எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஏற்பட்டு வரும் சிரமங்களில் இதுவும் ஒன்றே என நாம் கருதுகிறோம். விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் உரமான அத்திவாரத்தை ஏற்படுத்தி வரும் இவ்வேளையில் சங்கிலித் தொடராக இடம் பெற்று வரும் இச்சம்பவங்கள் எமது தியாகம் செறிந்த தீர நடவடிக்கைகளை சீர்குலைக்கும் நோக்கிலேயே இடம் பெற்று வருகின்றது எனத் திடமாக நம்புகிறோம். இன்று தமிழ் நாட்டில் இடம்பெற்ற இச்சம்பவத்தின் பொழுது தமிழ் நாட்டில் நடவடிக்கைகளை வைத்திருக்கும் சகல இயக்கங்களினதும் தலைவர்கள், உறுப்பினர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இறுதியாகக் கிடைத்த தகவலின்படி தலைவர் பிரபாகரன் அவர்களின் இல்லம், விடுதலைப்புலிகளின் தலைமை அலுவலகம் ஆகியன தொடர்ந்தும் தமிழகப் பொலிசாரின் காவலிற்குட்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

9/11/86 நேற்று 8/11/86 வவுனியா மாவட்டத்தில் உள்ள பெரியகட்டு, புளியங்குளம் ஆகிய இடங்களுக்கு இடையில் வைத்து எம்மவர்கள் ராணுவத்தினர் மீது கண்ணிவெடித்தாக்குதல் மேற்கொண்டனர். இத் தாக்குதலில் 18ராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பல ராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

எம்மிடமிருந்து தமிழகப் பொலிசாரால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் சிறிலங்கா இனவாத அரசின் கொடூர செயல்களில் ஒன்றான விமானக் குண்டு வீச்சிற்கு எதிராகப் பயன்படுத்துவதற்கென வெளிநாட்டில் வதியும் தமிழீழ மக்களிடம் இருந்து பல சிரமங்களின் மத்தியில் பெறப்பட்ட பண உதவிகளைக் கொண்டு, எத்தனையோ தடைகளைத் தாண்டி எடுத்துச் செல்லப்பட்ட சாம் ரகத்தைச் சேர்ந்த விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் அடங்கும்.

10/11/86 நேற்றுக் காலை யாழ்கோட்டை ராணுவமுகாமில் இருந்து வெளியே வந்த கேர்ணல் விஜயசூரியாவும் கப்ரன் கொத்தலாவலையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் பிராந்திய தளபதி கிட்டுவுடனும், ரகீமுடனும் கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக பேச்சுக்கள் நடத்தினர். புலிகளினது நிபந்தனைகள் மூன்றையும் ஏற்றுக் கொண்ட இவர்கள் இன்று கைதிகளைப் பரிமாறுவதற்குச் சம்மதித்தனர். அம் மூன்று நிபந்தனைகளும் வருமாறு:-

(1) நாம் தெரிவித்த 10விடுதலைப் புலிகளும் முன்கூட்டியே கோட்டை ராணுவமுகாமிற்கு கொண்டு வரப்படல் வேண்டும்.

(2)இந்த நிகழ்ச்சியானது சிறிலங்கா மற்றும் வெளிநாட்டு நிருபர்கள் முன்னிலையில் நடைபெற வேண்டும்.

(3)அரசியல் சார்பற்ற மதகுரு ஒருவர் யாழ்ப்பாணத்தின் இன்றைய உண்மை நிலையை நேரில் பார்த்து சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பனவாகும்.

விடுதலை செய்யப்படவேண்டிய 2 புலிகளது பெயரும் பாதுகாப்புக் காரணங்களுக்காக ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

ராணுவத்தினர் அழைத்து வரப்படுவதைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். கப்ரன் கொத்தலாவலை புலிகளிடம் இருந்து பறேட்டா என அழைக்கப்படும் நவீன உபயந்திர துப்பாக்கி ஒன்றை வாங்கிச் சுட்டுப் பார்த்தார். பேச்சுக்கள் முடிந்ததும் ராணுவத்தினர் முகாமிற்குத் திரும்புகையில் புலிகளுடனும், மக்களுடனும் இணைந்து புகைப்படங்கள் எடுத்ததோடு, புலிகளது அதிகாரபூர்வமான ஏடான விடுதலைப்புலிகள் பத்திரிகையையும் வாங்கிச் சென்றனர்.

இன்று காலை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நாவற்குடாவில் கடையொன்றில் 2வது பயிற்சி முகாமைச் சேர்ந்த எம்மவரான கரன் நின்று கொண்டிருந்த போது சாதாரண உடையில் வந்த பொலிஸ் கொமாண்டோக்கள் அவரைச் சுட்டுக் கொன்றதுடன் அவரது உடலையும் எடுத்துச் சென்றுள்ளனர். இவ்வீரம் வீரவேங்கைக்கு எமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்றோம்.

www.tamilarangam.net

11/11/86 இன்று காலை 5.30மணியளவில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய முகாம்களில் இருந்து வெளியே வந்த ராணுவத்தினர் மீது எம்மவர்கள் தாக்குதல் நடத்தினர். இதே நேரம் கெலிகொப்டர் மூலம் வல்லை வெளியிலும் ராணுவத்தினர் இறக்கப்பட்டனர். இவர்கள் மீது எம்மவர்கள் மூர்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டனர். எம்மவரின் தாக்குதலால் முழு ராணுவமும் அப்புறப்படுத்தப்பட்டது. இதன் போது ராணுவத்தினர் பலத்த சேதத்துடனும் இழப்புக்களுடனும் பின்வாங்கினர். இதே நேரம் பருத்தித்துறையில் நடந்த சண்டையில் எம்மவரான தேவாமுரளி, தங்கச்சி, பாக்கியம் ஆகியோர் காயமடைந்தனர். இவர்களை வானில் ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு வானில் திரும்பி வந்தபோது வான் பொம்பரின் குண்டு வீச்சுக்கு இலக்காகி பவான் என்ற எமது வீரர் வீரமரணம் அடைந்தார் என்பதனை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வீரம் வீரவேங்கைக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

கடலில் இருந்த 7பீரங்கிப் படகுகள் சரமாரியாக செல்களைப் பொழிந்த வண்ணமிருந்தன. இன்று காலை தொடக்கம் 4கெலிகொப்டர், 3பொம்பர், ஒரு சீபிளேன் ஆகியன ஆகாயத்தில் இருந்து எமது வீரர்களை நோக்கியும் பொதுமக்களை நோக்கியும் தொடர்ச்சியான குண்டுப் பிரயோகமும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்ட வண்ணமுள்ளன. இன்றைய தாக்குதலில் பல ராணுவத்தினர் கொல்லப் பட்டனர் பலர் படுகாயமடைந்தனர். எமது தரப்பில் சிவா, பவான் ஆகிய இரு வீரவேங்கைகள் வீரமரணம் அடைந்துள்ளனர் என்பதனை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விரு வீரவேங்கைகளுக்கும் எமது வீரவணக்கத்தைச் செலுத்துகின்றோம். பொம்பர், கெலிகொப்டர் தாக்குதல்களால் பின்வரும் பகுதிகள் பாதிக்கப் பட்டுள்ளன. அவையாவன:-
அச்சுவேலி, நெல்லியடி, வல்லை, ஊரிக்காடு, திக்கம், பொலிகண்டி, இம்பிலிட்டி, பருத்தித்துறை, மந்திகை, தம்பசை, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, வியாபாரிமூலை, ஒராங்கட்டை என்பனவாகும்.
இத்தாக்குதல்களினால் பல பொது மக்களின் உடமைகளும் உயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இது பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும், அவரது அரசியல் ஆலோசகர் திரு.பாலசிங்கத்தையும் இன்று காலை தமிழக முதலமைச்சர் திரு.எம்.ஜி.ராமச்சந்திரன் தமது ராஜ[illegible]லத்தில் அழைத்து 90நிமிடங்கள் வரை கலந்தாலோசித்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் மீது தமிழ்நாட்டுப் பொலிஸ் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து தமது கவலையையும் அதிருப்தியையும் தெரிவித்துக் கொண்ட திரு.பிரபாகரன் தம்மை அவமானப்படுத்தும்முறையில் பொலிசார் நடந்து கொண்டது முறையிட்டார். இது சம்பந்தமாக தாம் கடும் நடவடிக்கை எடுப்பதாக எம்.ஜி.ராமச்சந்திரன் வாக்குறுதியளித்தார்.

12/11/86 யாழ் குடாநாட்டின் கடற்கரைப் பட்டினங்களான தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகியவற்றின் மீது 2வது நாளாக தொடர்ந்தும் சிறிலங்கா விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கின. இத்தாக்குதலின் போது ஏராளமான கடைகள், வீடுகள் சேதமாக்கப்பட்டன. இரு முதியோர் கொல்லப்பட்டனர்.
தமிழ் நாட்டில் ஒரே நாளில் தமிழ் போராளிகள் கைது செய்யப்பட்டதற்கு இந்திய பாராளுமன்றத்தில் எதிர்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.
தமிழீழ விடுதலைப்புலிகள் மீது தமிழகப் பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கையை கண்டித்து நேற்று கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் பெரியளவு ஊர்வலங்கள் பொதுமக்களால் நடத்தப்பட்டன.

13/11/86
11/11/86 அன்று பருத்தித்துறையில் சிறிலங்கா ராணுவத்திற்கு எதிரான சண்டையின்போது யாழ் பிராந்திய தளபதி கிட்டுவும் அரசியல் பிரிவு பொறுப்பாளரான திலீபன் அமுதலிங்கமும் காயமடைந்துள்ளனர். சிறிலங்கா அரசின் முப்படைகளின் பாரிய தாக்குதல்களைத் தொடர்ந்து போரிட்ட தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் கெரில்லா அணிக்கு யாழ் தளபதி கிட்டு தலைமை தாங்கிச் சென்றார். விடுதலைப்புலிகள் திறமாகப் போரிட்டு ராணுவத்தை முகாமுக்குள் பின்வாங்கி ஓடச் செய்தனர். கிட்டுவிற்கு [illegible] கையில் துப்பாக்கிக் காயம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவரது கையினுள் புகுந்திருந்த துப்பாக்கி ரவை வெளியே எடுக்கப்பட்டது. இப்போது அவர் சுகமடைந்து வருகிறார். அமுதலிங்கம் வயிற்றில் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகி தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
நேற்று முன்தினம் சாவகச்சேரியில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் இனரின் முகாம் ஒன்றில் எறிகுண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததை தொடர்ந்து எம்மவர்கள் தங்களை தாக்க வருவதாக எண்ணி தங்களிடம் இருந்த துப்பாக்கியால் 3ரவைக்கூடுகள் முடியும் வரை கண்மூடித்தனமாகச் சுட்டுத் தள்ளினர். அத்தோடு தங்கள் முகாமைச் சுற்றி புதைத்து வைத்திருந்த கண்ணி வெடிகளையும் வெடிக்கச் செய்தனர். இச்சம்பவத்தின் போது அவர்கள் தரப்பில் 6பேர் வரை இறந்துள்ளதோடு பலர் படுகாயமடைந்துள்ளனர்.
தமிழ் போராளிகளை விடுதலை செய்து அவர்களின் ஆயுதங்களைத் திருப்பித் தராவிட்டால் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு நாளை தீக்குளிக்கப் போவதாக 25மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

SOLT (U.K.)
211 KATHERINE ROAD, EAST HAM
LONDON E6 1BU
TEL: 475 0356

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்